## பிரிவு 4

## மக்கள்தொகை முன்மதிப்பீடு

**3.4.1** குடிமைப்பணிகளின் அளவையும், நிதித் தேவையையும் மதிப்பிடுவதற்கு மக்கள் தொகை பற்றிய முன் மதிப்பீடு இன்றியமையாததாகிறது. இங்கு, இந்த மதிப்பீடு மாநில நிதி ஆணை அறிக்கையை செயல்படுத்தப்படும் கால அளவுக்கு, அதாவது, 1997 ஏப்ரலிலிருந்து தொடங்கி ஐந்தாண்டு வரை (1997–98 முதல் 2001–2002 வரை) என்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் தொகையைப் பகுப்பாய்வு செய்கையில், நகர்ப்பகுதி மற்றும் ஊரகப்பகுதிகளின் மக்கள் தொகை, மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பொருள் விளக்கத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளதைக் காணலாம். இதன் விவரங்கள் அட்டவணை 3.23 இல் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் தற்போது, அதாவது 1994–ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சி திருத்தச் சட்டத்தின் கீழ் பேரூராட்சிகள் கொண்டுவரப்பட்ட பின்னர், பேரூராட்சிகள், நகர்ப்பகுதிகளாகக் கருதப்படுகின்ற போதிலும், ஏறக்குறைய 59.36 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட சுமார் 420 பேரூராட்சிகள் இன்னும் ஊரகத் தன்மையைக் கொண்டவையாகவே உள்ளன என்பது உள்ளாட்சி மன்றங்களின் கருத்தாகும்.

**அட்டவணை 3.23** தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் மக்கள் தொகைப் பெருக்கத்தின் போக்கு:

| | மக்கள் தொகை (இலட்சத்தில்) | | | பத்தாண்டு வளர்ச்சிவீதம் (சதவீதத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1971 | 1981 | 1991 | 1961–71 | 1971–81 | 1981–91 |
| தமிழ்நாடு | | | | | | |
| நகர்ப்பகுதி | 125 | 160 | 192 | 38.63 | 27.94 | 19.38 |
| ஊரகப்பகுதி | 287 | 324 | 367 | 16.20 | 13.24 | 12.92 |
| தமிழ்நாடு முழுவதும் | 412 | 484 | 559 | 28.75 | 17.50 | 15.39 |
| குடும்ப அளவு (நகர்ப்பகுதி) | 5.10 | 4.93 | 4.65 | | | |
| குடும்ப அளவு (ஊரகப்பகுதி) | 4.70 | 4.64 | 4.38 | | | |
| தமிழ்நாடு முழுவதும் | 4.79 | 4.74 | 4.46 | | | |
| இந்தியா | | | | | | |
| நகர்ப்பகுதி | 1091 | 1595 | 2176 | 37.90 | 46.50 | 36.45 |
| ஊரகப்பகுதி | 4390 | 5257 | 6287 | 21.67 | 19.91 | 19.60 |
| இந்தியா முழுவதும் | 5481 | 6852 | 8463 | 24.58 | 25.10 | 23.51 |
| குடும்ப அளவு (நகர்ப்பகுதி) | 5.23 | 5.52 | 5.51 | | | |
| குடும்ப அளவு (ஊரகப்பகுதி) | 5.53 | 5.44 | 5.63 | | | |
| இந்தியா முழுவதும் | 5.46 | 5.46 | 5.60 | | | |

**3.4.2.** நாட்டின் மொத்த மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் மக்கள் தொகை பெருக்க வீதம், கடந்த இருபதாண்டுகளில் குறைவாகவே உள்ளது. நகர்ப்பகுதிகளிலும், ஊரகப் பகுதிகளிலும் மக்கள் தொகைப் பெருக்க வீதம், 1961–71 இல் 28.75 சதவீதமாக இருந்து 1981–91 இல் 15.39 சதவீதமாகக் குறைந்துள்ளது. சராசரி குடும்ப அளவும் குறைந்துள்ளது. 2002–ஆம் ஆண்டின் உத்தேச மக்கள் தொகையை முன் மதிப்பீடு செய்வதற்குக் குறைந்து கொண்டே வரும் மக்கள் தொகைப் பெருக்க வீதமே பின்பற்றப்பட்டுள்ளது. இதே கால அளவில், ஆண்டு மக்கள் தொகையின் கூட்டுப் பெருக்க வீதமும் 2.56(1961–71) சதவீதத்திலிருந்து 1.63 சதவீதமாகவும் (1971–81) அதன் பின்னர் 1.44 சதவீதமாகவும் (1981–91) குறைந்தது. 2001–2002 இல் இது மேலும் 1.28 சதவீதமாகக் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு வகை உள்ளாட்சி மன்றங்களில் மக்கள் தொகையைக் கணக்கிடுகையில், கடந்த இருபதாண்டுகளில் மாநில மொத்த மக்கள் தொகைக்கும் அவை ஒவ்வொன்றின் மக்கள் தொகைக்கும் இடையேயான விகிதாச்சாரத்தில் காணப்படும் மாற்றம், ஓர் அளவு கோலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. முன் மதிப்பீடு, அட்டவணை 3.24 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.24 மக்கள் தொகை முன் மதிப்பீட்டின் சுருக்கம் **

| உள்ளாட்சி மன்றங்கள் | 1991 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|---|---|---|---|
| சென்னை மாநகராட்சி | 38.41 | 41.58 | 42.11 | 42.65 | 43.19 | 43.75 | 44.31 | 44.87 |
| அனைத்து மாநகராட்சிகள் | 70.30 | 75.34 | 76.30 | 77.28 | 78.27 | 79.27 | 80.28 | 81.31 |
| நகராட்சிகள் | 71.86 | 76.89 | 77.88 | 78.87 | 79.88 | 80.90 | 81.94 | 82.99 |
| பேரூராட்சிகள் | 87.29 | 92.51 | 93.69 | 94.89 | 96.10 | 97.33 | 98.58 | 99.84 |
| நகர்ப்பகுதி முழுவதும் | 229.45 | 244.74 | 247.87 | 251.04 | 254.25 | 257.5 | 260.8 | 264.14 |
| ஊராட்சி ஒன்றியங்களும் ஊராட்சிகளும் (ஊரகம்) | 329.14 | 350.51 | 354.99 | 359.53 | 364.13 | 368.79 | 373.51 | 378.28 |
| மொத்தம் | 558.59 | 595.24 | 602.86 | 610.57 | 618.38 | 626.29 | 634.30 | 642.42 |

** குறிப்பு: இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஊரகப் பகுதி மற்றும் நகர்ப்பகுதிக்கான தனித்தனி விவரங்கள், முந்தைய அட்டவணையுடன், அதாவது, அட்டவணை எண் 3.23 ஒத்திருக்கவிலலை. ஏனெனில், இது நகர்ப்பகுதி மக்கட் தொகை கணக்கெடுப்பிலிருந்து வேறுபடுகிறது. மாநகராட்சிகள்/நகராட்சிகள்/பேரூராட்சிகள் போன்ற அனைத்து உள்ளாட்சி மன்றங்களையும் உள்ளடக்கியுள்ளது.